# கம்ப மாகவி வாழிய

*கலாநிதி காரை, செ. சுந்தரம்பிள்ளை*

1

கம்ப னாகிய அற்புத மாகவி
கரிய மாலின் அவதார மாகிய
எம்பிரான் ஸ்ரீ ராமனின் காதையை
இனிய காவிய மாக வடித்தனன்
தம்பிமாரை உயிரெனக் கொண்டவன்
தந்தை சொற்படி கானகம் சென்றவன்
அம்புவிக் கெலாம் மூலவித் தானவன்
யார் அவன் ? அண்ணல் ராமனே ! என்றனன்

2

எங்கே தர்மம் அழிந்திடு கின்றதோ
எங்கே தீமை மலிந்திடு கின்றதோ
அங்கே தர்மத்தைக் காத்திட வேண்டியும்
அதர்ம மென்பதைக் கொன்றிட வேண்டியும்
சங்கு சக்கர தாரி யுகந்தொறும்
தானே வந்தவதாரம் புரிவதை
எங்கும் எப்பொருள் மீதும் எஞ்ஞான்றும் நின் (று)
இயங்கும் ராம கதையூடாய்ச் செப்பினன்

3

கங்கை யாற்றங் கரையிலே வேடனைக்
காதலோடுயிர்த் தம்பியாய் ஏற்றதும்
பங்கமுற்ற குரக்கின வேந்தனை
பாசமோடு தன்பின்னவன் என்றதும்
எங்களுக்குள் ஒருவன் விபீடணன்
என்று பாசமோ டன்பு பொழிந்தும்
செங்கண் மாலினா லன்றிச் செகமிசை
செய்யவல்லவர் யார் எனச் செப்பினன்

4

தாரமொன் றெனும் சத்திய வந்தனன்
தரணி மீதுயிர் நேயம் படைத்தவன்
வீரமேயுரு வான வடிவினன்
வெற்றி யன்றி யறியாத மன்னவன்
ஈர மான உளத்தினன்; போரிலே
ராவணன் வெறுங்கையுடன் நிற்கையில்
தீரமோடு " நீ சென்றுவா" என்றவன்
தெய்வமாக் கதை தெய்வீகமாக்கினான்

5

'அரனென்'பவன் நீயோ உனக்குத்தான்
அகில மென்பதும் சொந்தமோ உந்தனை
இரந்து வாழவோ நான் தமிழ் கற்றுளேன்
என்று சோழனைக் கேட்ட துணிவினன்
பரம்பொருள் வடிவான ஒருவனை
பக்தருக்குளே நின்று நடமிடும்
பெரியனைப் புகழ் காவிய மாக்கிய
பெரியவன் கம்ப மாகவி வாழிக





ஒன்பதாவது கம்பன் விழா.

1. மங்கள விளக்கேற்றும் மங்கள இசையாளர் சுந்தரமூர்த்தி.
2. ஆசி வழங்கும் அருளாளர்.
3. முருகையன் தலைமையில் கவிஞர்கள்.
4. நடுவர்களாகச் சொக்கனுடன் சீ. வீகே.சிவஞானம், முருகையன்.














1. ஊர்வலமாய்க் கம்பன்

2. வாலி, சுக்கிரீவராய் காரை செ. சுந்தரம்பிள்ளை, சோ. பத்மநாதன்.

3. அருளாசி வழங்கும் ஆண்டகை, அருகே பேராசிரியர் அ. துரைராசா,சிவத்தமிழ்ச் செல்வி.

4. முனிவர் கோலத்தில் முருகையன், கல்வயல்.



செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி



க. சொக்கலிங்கம்



பேராசிரியர்
அ.சண்முகதாஸ்



கலாநிதி
காரை. செ.சுந்தரம்பிள்ளை



கவிஞர்
ச.வே.பஞ்சாட்சரம்



ஆ. கனகசபாபதி



இ. பாலசுந்தரம்



அமரர் வித்துவான்,
சி. குமாரசாமி



க. நாகேஸ்வரன்



புலவர் ஈழத்துச்
சிவானந்தன்



கவிஞர் இரத்தினதுரை